அகதிகள் புனரமைப்பு மந்திரிக்கு எதிர்ப்பு!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

தனி இதழ்: ஒரு அணா	சென்னை : ஆனி மீ 2உ புதன் (16—6—54)	மலர் : 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர் : ஆனி மீ 3உ வியாழன் (17—6—54)	இதழ் : 2

பஞ்சாப் அகதிகளிடம் பாசம்!

வங்காள அகதிகளிடம் துவேஷம்!

பஞ்சாப் அகதிகளுக்கு 9 ரூபாய்! வங்க அகதிகளுக்கு ஒரே ரூபாய்!

இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் எல்லாம் சிக்கலானதும், மிக்க தொல்லை தரக்கூடியதும் அகதிகள் பிரச்னையேயாகும். இந்தப் பிரச்னை, காங்கிரஸ் தலைவர்களின் சொந்த சிருஷ்டி!

அகதிகளின் புனரமைப்புக்காக, யூனியன் சர்க்கார் இது வரை கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி அழுதுள்ளது. அவர்கள், பெயருக்குத்தான் அகதிகளேயல்லாது, உண்மையில் அவர்கள் ஆளும் வர்க்கத்தினராக ஆடம்பரமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் புனரமைப்பைக் கண்காணிப்பதற்கென யூனியன் சர்க்காரில் ஒரு அமைச்சர் இருக்கிறார். அவர் சம்பளமாகவும், படியாகவும் மாதா மாதம் ஆயிரக்கணக்கான ரூபாய்களை விழுங்கிக் கொண்டு இருக்கிறார்.

அவர் பெயர் அஜித் பிரசாத் ஜெயின். அவரைப் போலவே மேற்கு வங்க சர்க்காரில் அகதிகள் புனரமைப்பை நிறைவேற்றுவதற்கென ரேணுகா ரே என்ற அம்மையார் அமைச்சராக இருக்கிறார்.

அமைச்சர் ஜெயின் மீது ஓர வஞ்சனையாக நடந்து கொண்டு வருகிறார் என்ற குற்றச்சாட்டையும், வங்க அமைச்சர் மீது திறமை இன்மை, அக்கரை இன்மை என்ற குற்றச்சாட்டுகளையும் சுமத்துகிறார், மேகநாத் ஷா என்ற மக்கள் சபை உறுப்பினர்.

"மேற்கு வங்கத்தில் புனரமைப்புத் திட்டங்கள் பல படுதோல்வி கண்டிருக்கின்றன அல்லது நல்ல உருவம் பெறாமல் இருக்கின்றன. இதன் பொருள், நிர்வாக இயந்திரம் மேலும் திறம்படச் செயலாற்ற வேண்டும் என்பதேயாகும். இவ்வகையில், முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீண்டும், இது விஷயத்தில், ஜெயின் கவலை கொள்ள வேண்டும்."

இப்படி ஒரு கடிதத்தை பிரதமர் நேரு தீட்டியுள்ளார்.

பிரதமரை, ஷா சந்தித்து நிலைமையை விளக்கியுமிருக்கிறார்.

டெல்லி நகரப்புறத்தில் உள்ள அகதிகள் குடியேற்றப் பகுதி, கல் கட்டிட வீடுகளும், கருங்கல் சல்லி தளவரிசை செய்த தெருக்களும், மின்சார வசதி, குடிநீர் அமைப்பு, பள்ளி—கல்லூரி ஏற்பாடு முதலியன கொண்டதாக உள்ளது. ஆனால் கல்கத்தா பகுதியிலோ, கதவில்லாத குடிசை, குடிநீர் பஞ்சம், மற்ற வசதி இல்லாமை என்ற முறையில் அகதிகள் முகாம் இருந்து வருகிறது.

மேற்கு பாகிஸ்தான் அகதிகளுக்காகக் கோடுக்கப்பட்டுள்ள—விட்டுவந்த அகதிகள் சொத்து உள்ளிட்டு—நஷ்ட ஈடு, சுமார் ரூ 300 கோடியாக இருக்க, கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை கிட்டத்தட்ட ரூ. 50 கோடியாகவே இருக்கிறது.

தக்க திட்டங்கள் இல்லாததால், அகதிகள் புனரமைப்புக்கென யூனியன் சர்க்காரால் ஒதுக்கப்பட்டத் தொகையையும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது.

1953—54-ல் மட்டும் யூனியன் சர்க்காரால் இத்துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூ 2 கோடி 5 லட்சமும், செலவிடத் தகுந்த ஏற்பாடு இல்லாததால், செலவழிக்கப்படாமலே தேங்கிவிட்டது.

கிழக்கு, மேற்கு பாகிஸ்தான் அகதிகளுக்குள் பாரபட்சம் பாராட்டப்படுகிறது. அகதிகளுக்காகச் செலவிடப்பட்ட ஒவ்வொரு பத்து ரூபாயிலும், மேற்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு 9 ரூபாயும், கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு ஒரே ஒரு ரூபாய் என்ற முறையிலும், ஓரவஞ்சனையாகச் செலவிடப்பட்டு இருக்கிறது.

மேற்கூறியவாறு, அகதிகள் குறைகளையும், சங்கத்தின் தலைவரான மேகநாத் ஷா (மக்கள் சபை உறுப்பினர்) பிரதமர் நேருவைக் கண்டு, குறையிட்டுள்ளார்.

'கிழக்கு—மேற்கு பாகிஸ்தான் அகதிகளுக்குள் பாரபட்சம் காட்டுகிறது இந்திய சர்க்கார் என்பதுதான் எங்களுடைய குற்றச் சாட்டு'

என்று, ஷா, நிருபர்களிடம் கூறியுள்ளார்.

வங்காளத்தில் பயிர் செய்வதற்குத் தகுதியான நிலம் ஏகர் ஒன்றுக்கு 1,500 ரூபாயாக விற்கப்படுகிறது. இந்த நிலையில், பயிரிடுவதற்காக, ஒவ்வொரு அகதிகளுக்கும் ஒரு ஏகர் நிலம் வாங்கிக் கொள்வதற்கென, தலைக்கு ரூ 500 கடன் கொடுக்க யூனியன் சர்க்கார் உத்தேசித்திருப்பது, அகதிகளுக்கு உதவி செய்யாது எனவும் ஷா குறிப்பிட்டார்.

கிழக்கு வங்கத்தில் உள்ள அகதிகளின் தொகை 30 லட்சமென சர்க்கார் கணக்கிட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் இருக்கும் அகதிகளின் தொகையோ 47 லட்சமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'ஆச்சாரியார் காலத்தில் துவங்கிய பதவி பேரம்!'

'காமராஜர் காலத்தில் வெற்றியாக முடிந்தது!'

பிசின் போட்டு ஒட்டினால் தான் சேர்ந்ததாகக் கொள்ள வேண்டுமா?'

எஸ். எஸ். ஆர். போக்கிற்கு திருக்குறள் முனுசாமி, கோபால (கவுண்டர்) கோவிந்தசாமி கண்டனம்!

"உழைப்பாளி கட்சி தற்போது கமிஷன் ஏஜெண்டாக மாறிவிட்டது; கோழியைக் காட்டி 'ஓட்' வாங்கி, அதை மாட்டுக்குக் கொடுத்து, 'எனக்கென்ன கொடுக்கிறாய்,' என்று கேட்டு, மந்திரி பதவியை கமிஷனாக வாங்கிக் கொண்டது தானே நடைபெற்றுள்ளது?"

—என்று தோழர் திருக்குறள் வி. முனுசாமி, எம் பி அவர்கள் திண்டிவனத்தில் நடைபெற்ற வன்னியப் பிரமுகர்கள் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

13—6—54 மாலை 3½ மணிக்கு தென் ஆர்க்காடு மாவட்ட வன்னிய பிரமுகர்களின் கூட்டம் அன்று திண்டிவனத்தில் தோழர் ஏ. கோபால கவுண்டர், எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் திருக்குறள் வி முனுசாமி, எம். பி, ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., உட்பட சுமார் 150 வன்னியப் பிரமுகர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்.

திருக்குறள் வி. முனுசாமி எம். பி. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'காங்கிரசுடன் உழைப்பாளி கட்சி சேர்ந்துவிட்டது சந்தேகமில்லாத விஷயம்; ஆளை அங்கமாக சட்ட சபையில் உட்கார்ந்திருப்பதும், அவர்களுடன் சேர்ந்து கைதூக்குவதும், காங்கிரசை எதிர்த்து கேள்வி கேட்பதை நிறுத்திக் கொண்டதும் எதைக் காட்டுகிறது? உழைப்பாளி கட்சியினர் காங்கிரசுடன் சேர்ந்துவிட்டதை வெட்டவெளிச்சமாக எடுத்துக் காட்டவில்லையா உறுப்பினர்களைப் பிசின் போட்டு ஒட்டுவதுதான், சேர்ந்து விட்டதாகக் கருதப்படுவதா?"

"30—6—54-ல் நடக்க இருக்கும் மாநாட்டில், அமைச்சர்கள் இராமசாமிக்கும், மாணிக்கவேலருக்கும் வரவேற்பு அளிக்க ஒரு சில சுயநலவாதிகள் துடிக்கின்றனர்; இதன் மூலம் வன்னிய மக்கள், அமைச்சர் எஸ். எஸ். இராமசாமியின் செய்கைக்கு முழு ஆதரவு காட்டுகிறார்கள் என மற்றவரை நம்பச் செய்யும் தந்திரமேயாகும்," என்றார்.

அடுத்து, தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., பேசுகையில், குறிப்பிட்டதாவது:—

"ஆச்சாரியார் பிரதமராக வந்ததிலிருந்து எஸ். எஸ். இராமசாமி மந்திரி பதவிக்குக் காவடி எடுக்க ஆரம்பித்தார். அன்று ஆரம்பித்த பதவி பேரத்தை காமராசர் பிரதமரானதும் தாம் மந்திரி பதவிக்கும் போனதின் மூலம் முடித்துக் கொண்டார். மாணிக்கவேலர் மந்திரியானதைத் துரோகம் என்று கூறிய எஸ். எஸ். ஆர்., அதே "துரோகத்தைத் தாமே செய்திருக்கிறார்," என்று குறிப்பிட்டார்.

அதன் பிறகு 14 தீர்மானங்கள் வன்னிய பிரமுகர்கள் கூட்டத்தில் பிரேரபிக்கப்பட்டு நிறைவேறியது.

புரோகிதச் சடங்கற்ற திருமணங்கள்!

புரோகிதர் கிடைக்காததின் எதிரொலி

திருப்பதி, ஜூன் 16—

திருச்சானூரில் இந்த ஆண்டு புரோகிதர்களுக்கும், நாதஸ்வரக்காரர்களுக்கும் ஏராளமான கிராக்கி ஏற்பட்டு விட்டதாம்! இதன் காரணமாக பல திருமணங்கள் புரோகிதர் இன்றியும் இசை நிகழ்ச்சிகள் இன்றியும் நடைபெற்றன என்று தெரிகிறது.

ஒரு திருமணத்தில் மணமக்கள் கடவுளின் உருவச்சிலையைச் சுற்றி வந்ததும் தாலி கட்டிக் கொண்டார்களாம்!

கனத்தின் பதவி மோகம் கண்டு குல மக்கள் சீற்றம்!

திண்டிவனம் பொதுக்கூட்டத்தில் கண்டனச் சொன்மாரி

"ஐ மு.-விலிருந்து உழைப்பாளி கட்சியினர் வெளியேறியதற்குக் காரணம் கொள்கையில் ஏற்பட்ட மாற்றந்தான் என்று எஸ். எஸ். இராமசாமி கூறிவருகிறார், உண்மையில் பதவி ஆசைக்காகவே அவர் வெளியேறினா; தேர்தல் திட்டத்தில் கூறிய படி உழைப்பாளி கட்சியினர் நடந்துகொள்ளவில்லை; ஓட்டளித்த மக்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் துரோகத்தைத்தான செய்துள்ளனா; மாணிக்கவேலர் மந்திரியானதை கையாண்டி செய்த எஸ். எஸ். ஆர்., அவர் பாதையிலே இப்போழுது சென்றிருப்பது என்; சட்ட சபையில், அவரைக் கிண்டல் செய்து பேசிய காங்கிரஸ்காரர்களுக்குத் தேர்தலில் நிற்கும்படி அன்று சவால் விட்டாரே? இன்று எங்களை சட்ட சபையில் தாக்கிப் பேசுகிறாரே?— இதற்கு என்ன பதில் சோல்வார் கனம் எஸ். எஸ். இராமசாமி!"

"20—6—54-ல் நடக்கவிருக்கும் மாநாட்டில் காங்கிரசை எதிர்த்து, என்றைக்கும்போல் உழைப்பாளி கட்சி நிற்கும் என்ற முடிவை நிறைவேற்றுவிட்டால், வரப்போகும் தேர்தலில் அவர்களை எதிர்த்து நாங்கள் போட்டியிடத் தயார்."

—இவ்வாறு, 13—6—54 அன்று மாலை திண்டிவனத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்கள் குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 16—6—54 புதன்

சீர்குலைக்கும் திருப்பணி!

இந்தியாவில் உள்ள பிரெஞ்சுத் திட்டுகளின் எதிர்காலம் குறித்து, நேர்மையான முடிவு காண்பது என்ற பெயரில், இந்திய சர்க்கார் சார்பிலும், பிரெஞ்சு சர்க்கார் சார்பிலும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பிரான்ஸ் தலைநகரான பாரிசில்! முடிவு, வழக்கம் போலவே, பிரச்சினையை பைசல் செய்யத் தவறிவிட்டது.

பிரெஞ்சிந்திய மக்கள் இந்திய யூனியனுடன் இணைவதை விரும்புகிறார்களா அல்லது இப்பொழுது இருப்பது போலவே, இனியும் தொடர்ந்து பிரெஞ்சு யூனியனுடன் இருப்பதை ஆதரிக்கின்றார்களா என்பதற்கு, பிரெஞ்சு இந்திய மக்களின் கருத்தறிய வேண்டும் என பிரான்ஸ் விரும்புகிறது. இந்தியத் துணைக்கண்டத்தை விட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெளியேறிய நாள் முதற்கொண்டே, இந்த யோசனையை பிரான்ஸ் வலியுறுத்திக்கொண்டு வந்திருக்கிறது. ஏற்கனவே இக்கோரிக்கையை இந்திய யூனியன் சார்பில் பிரதமர் நேரு ஒப்புக்கொண்டும் உள்ளார்.

தக்கதோர் சூழ்நிலை உருவானதும், இத்துறையில் வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்வது என்ற கொள்கையை இரு சாராரும் அப்பொழுதே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பிரான்சின் வாக்கெடுப்புக் கோரிக்கையை, பண்டிதர், கொஞ்சம் முன்யோசனையுடன், அன்றே நிராகரித்து இருக்க வேண்டும். அன்று அப்படி நிராகரித்து இருந்தால் கோரிக்கையை உடும்புப் பிடியாகப் பற்றிக்கொண்டு இன்று பிரான்ஸ் பிடிவாதம் பேசுவதற்கு இடமிருந்திருக்காது.

பிரெஞ்சிந்திய மக்களின் உரிமை வேட்கை, அன்று இருந்ததுபோல் மந்தமாக இல்லாமல், பெரும் புயலாக வீசத் தொடங்கி இருக்கிறது. ஏற்கனவே மூன்றில் ஒரு பங்கான பிரெஞ்சிந்தியப் பகுதி, பிரெஞ்சு மக்களின் சுதந்திர ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கொடி அங்கு பறக்கவில்லை. பிரெஞ்சு அதிகார வர்க்கத்தின் செல்வாக்கும் அங்கு செல்லவில்லை. சுதந்திர மக்களின் சுயாட்சிதான் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

பிரெஞ்சிந்திய விடுதலை இயக்கம், போர்க்கொடி உயர்த்தி இரண்டு திங்களுக்கு மேலாகிறது. ஆரம்பத்தில் இருந்த மிடுக்கு, இன்று சற்றுத் தளர்ந்து காணப்படும் வேதனை தரும் போர்க்களச் செய்தியை, மறைத்துப் பேசுவதில் பயனேதும் கிடையாது.

எதிர்பாராத அளவில் மிகத் தீவிரமாக எழுந்த விடுதலைப் போர், மெள்ள மெள்ள தகர்ந்து செல்லும் நிலையைப் பெற்றிருப்பது ஆராய்ந்து அறியத்தக்கதாகும். பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை வேகத்தின் விளைவாகத்தான், விடுதலைப் போர் மந்தகதி அடைந்து வருகிறது என்பது, நிலைமையை விளக்கிக் கொண்டதற்கான போதிய காரணமாகாது.

விடுபட்ட பிரெஞ்சுப் பகுதிகளை, இந்திய யூனியனுடன் இணைத்துக் கொள்ள, நேரு பண்டிதர், ஐயத்திற்கிடமின்றி ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது, விடுதலை வீரர்களை விலாப்புறத்தில் குத்திய சோகச் செய்தியாகும் என்பதில் சந்தேகமில்லை. இச்செதி மூட்டிய அதிர்ச்சி, விடுதலை வீரர்களுக்கு இருந்த விடுதலை ஆவலைக், கூடுமானவரை குன்றச் செய்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

விடுவிக்கப்பட்ட பகுதிகளை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடம் சமரசம் பேச பண்டிதர் முன்வந்ததும், பேச்சுவார்த்தை நடத்தியதும், விடுதலைப் போரின் வேகத்தைத் தணிப்பதற்குத் துணையாக இருந்திருக்கிறது.

மேற்கூறிய மூன்று காரணங்கள் மட்டுமே அல்லாமல், அரசியல் கட்சிக்குள்ளாக ஏற்பட்டு இருக்கும் 'வலையடி வழக்கும்' பிரெஞ்சிந்திய மக்களுக்கு இருந்த விடுதலை ஆவலுக்கு உலைவைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எல்லாவற்றையும் காட்டிலும், அரசியல் கட்சிகளின் இக் 'கழுத்தறுப்பு' வேலைதான் விடுதலைப் போரை சீரழித்திருக்கிறது எனக் கூறுவதும் மிகையாகாது.

புலியை சுட்டு வீழ்த்தும் பொதுப் பிரச்சினையை மேற்கொண்டுள்ள கட்சிகள், புலி செத்து விழுவதற்குள், அப்படி சாகடித்ததினால் ஏற்படும் கீர்த்தியையும் கித்தாப்பையும், தங்கள் தங்கள் கட்சிக்கு மூலதனமாக்கிக் கொள்ள, திரைமறைவில் சதி செய்ததின் காரணமாகத்தான், புதுவையில் கடலெனப் பொங்கி எழுந்த விடுதலை வெள்ளம் தேங்கிக் கிடக்கும் குட்டையாக மாறி காட்சி அளித்துக் கொண்டு இருக்கிறது.

எந்த ஒரு பொது விவகாரத்தையும், தங்கள் கட்சிக்கு வலிவூட்டும் கருவியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடையவர்களுக்கு, ஏகாதிபத்தியத்தினிடமிருந்து பிரெஞ்சுத் திட்டுகள் விடுபடுவது என்பது இரண்டாம் பட்சமாகவும், தங்கள் கட்சி பெறும் ஆதிக்கத்தின் அளவுதான் முதல் பட்சமாகவும் இருக்க முடியும். எனவே அத்தகையவர்கள் உரத்துக் கூறிடும் 'கட்டுறவு—ஒத்துழைப்பு' என்பனவெல்லாம், பொதுமக்களை ஏய்க்கும் வெறும் மயக்க உரைகளேயாகும்.

நடைபெறும் ஓட்டப் பந்தயத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள, ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கும் கட்டிளங்காளையின் தோளில் இடம் பெற்று, இளங்காளை பந்தயத்தில் வெற்றி பெற்றதும், அப்படி அவன் பந்தயத்தில் வெற்றி பெற்றது தன்னுடைய அரிய ஒத்துழைப்பால் தான் என ஒரு 'புல் தடுக்கி' புலவன் கிளம்பினால், அது, எவ்வளவு பொருத்தமானதாக இருக்க முடியுமோ, அதே பொருத்தமானதாகத்தான் இருக்க முடியும், அடிப்படை ஒற்றுமை இல்லாத அரசியல் கட்சிகளில் சில 'பொதுப் பிரச்சினை' பெயர் கூறி, சொந்தப் புகழ் தேடப் பார்ப்பதும்!

பிரெஞ்சுத் திட்டுகள் பற்றி மீண்டும் பேசசைத் துவங்க, பிரெஞ்சு ஏகாதிபத்திய அதிகாரிகள் டில்லி வரப்போகிறார்களாம்! சமரச பேச்சு நடைபெற இருக்கிறதாம்!

இதுவரை நடைபெற்ற பேச்சுகளில் வெற்றி ஏற்பட்டு இருந்தால் அல்லவா, டெல்லி பேச்சில் வெற்றி நிச்சயம் என்று முடிவு கட்டுவதற்கு? சர்க்கார் என்ற உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு, சமரச கீதம் பாடட்டும் இரண்டு ஏகாதிபத்தியங்களும்! ஏகாதிபத்தியங்களை மட்டுமே அல்லாமல், எல்லாவற்றையும் ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெற்ற மக்கள் சக்தி, ஒன்று திரளட்டும், பிரெஞ்சு திட்டுகளை விடுவிக்க—சுதந்திரக் குரலோசை எழுப்ப!

நீக்ரோ மந்திரவாதி கைது!

நியூயார்க், ஜூன் 13—

33 வயதான நீக்ரோ ஒருவரைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

அந்த நீக்ரோ ஒரு மந்திரவாதியென்று தன்னைத்தானே சொல்லிக் கொள்கிறான்.

சென்ற வெள்ளிக் கிழமையன்று, அந்த நீக்ரோ, மயானம் ஒன்றில் சவக்குழி ஒன்றைத் தோண்டி அதனுள் இருந்த சவத்தின் எலும்புகளைத் தோண்டி எடுத்தார் என்று போலீசார் குற்றம் சாட்டுகின்றனர்.

மண்டை ஓட்டையும், முன்னை எலும்புகளையும் எடுத்துக்கொண்டு போய் தன் வீட்டில் சாராயத்தில் போட்டு வைத்திருப்பதாயும், தான் மந்திர வேலைகள் செய்யும்போது அந்தச் சாற்றை தனது நெற்றியிலும், வலது கையிலும் தேய்த்துக்கொண்டால் தனது சக்தி அதிகமாகிறதென்றும் அந்த மந்திரவாதி கூறியிருக்கிறார்.

விவசாயிகள் கடன் பளுவை நீக்க ஆந்திரா நடவடிக்கை

சீக்கிரம் ஏற்பாடு செய்யப்படுமாம்!

"கடன் பளுவினால் தொந்தரவுக்குள்ளாகியிருக்கும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க சீக்கிரமே ஆந்திர சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்கள்,"

என்று ஆந்திர ராஜ்ய முதல் அமைச்சர் பிரகாசம் கூறினார்.

அரசியல் தியாகிகளுக்கு நிலம் அளிக்கும்போது தகுதி உள்ளவர்களுக்கே நிலமான்யம் அளிக்கப்படுமென்றும், வாழ்க்கையில் நல்ல நிலைமையில் உள்ள அரசியல் தியாகிகள், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தகுதியற்ற முறையில் நிலங்களைப் பெற்றிருந்தால் அதுபற்றி விசாரணை செய்யப்பட்டு, அந்த நிலங்களை சர்க்கார் திரும்ப எடுத்துக் கொள்ளுமென்று முதல் அமைச்சர் பிரகாசம் மேலும் கூறினார்.

கனம் சஞ்சீவி ரெட்டியும் ஜப்பான் செல்ல விருந்த சுற்றுப் பயணம் கைவிடப்பட்டதாக தோழர் பிரகாசம் மேலும் கூறினார்.

சென்னையில் உள்ள ஆந்திர அலுவலகங்கள் பற்றிப் பேசுகையில், இடம் கிடைத்தவுடன் அந்த அலுவலகங்கள் ஆந்திராவுக்கு மாற்றப்படும் என்று அவர் கூறினார்.

நகர சுத்தி தொழிலாளர் வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது!

மத்திய பிரதேச சர்க்கார் அறிவிப்பு

ஜூன் 16-ந் தேதியன்று ஜபல்பூர் நகரசுத்தித் தொழிலாளர்கள் ஆரம்பிக்க இருக்கும் வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்று மத்திய பிரதேச சர்க்கார் அறிவித்துள்ளனர்.

1600-க்கு மேற்பட்ட நகர சுத்தித் தொழிலாளிகள் தங்கள் சம்பளத்தை ரூ 20—1—30 என்பதிலிருந்து ரூ 30—1—40 என்று மாற்ற வேண்டுமென்றும், அலவன்ஸ் தொகையை ரூ 16-லிருந்து ரூ 30 ஆக உயர்த்த வேண்டுமென்றும் கோருகின்றனர்.

காஷ்மீர் தேர்தல்

பிரஜா பரிஷத் கட்சியினர் வெற்றி

ஜம்மு மாகாணத்தின் மிகப் பெரிய நகரமான உதயபூர் நகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் 10 ஸ்தானங்களில் ஒன்பது ஸ்தானங்களை பிரஜா பரிஷத் கட்சியினர் கைப்பற்றினர்; தேசிய மகாநாட்டு கட்சியினர் ஒரே ஒரு இடத்தைத்தான் கைப்பற்ற முடிந்தது. இன்னும் பல நகரசபைகளில் தேர்தல்கள் நடைபெற வேண்டியிருக்கிறது.

ஐரிஷ் தேசிய வீரர்கள் கைது

வட அயர்லாந்தில் அமளி

டப்ளின், ஜூன் 13—

வடக்கு அயர்லாந்தில் எல்லை ஓரத்தில் போலீசார் கலகக்காரர்கள் உபயோகப்படுத்திய மோட்டார் லாரி ஒன்றைக் கைப்பற்றினார்கள்.

பிரிட்டிஷாருக்குச் சொந்தமான வெடி மருந்துச்சாலை ஒன்றைக் கலகக்காரர்கள் தாக்கி வெடி மருந்துகளையும், அப்பாக்கிகளையும், ஒரு மோட்டார் காரையும் கொள்ளையடித்தனர்.

ஐரிஷ் குடியரசுச் சேனையிலிருந்து விலக்கப்பட்டவர்களே இக்கலகக் காரர்கள் என்று அரசாங்கம் கருதுகிறது. இவர்கள் இரண்டாவது உலகப் போருக்கு முன்னர் ஐரிஷ் குடியரசுடன் பிரிட்டனின் ஆதிக்கத்தில் உள்ள வடக்கு அயர்லாந்தை இணைக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர்.

பெரியதோர் கிளர்ச்சி ஒன்றை எதிர்பார்த்து பிரிட்டிஷ் அதிகாரிகள் தகுந்த எச்சரிக்கையுடன் இருக்கிறார்களாம்.

பிரிட்டிஷ் சிப்பாய்கள் போன்று உடை உடுத்திய 15 பேர் ஆர்மாகில் உள்ள பிரிட்டிஷ் இராணுவ முகாமில் நுழைந்து 150 ரைபிள்களையும், 41 மெஷின் துப்பாக்கிகளையும் கைப்பற்றிச் சென்றனராம்.

போலீசார் பலரைக் கைது செய்தனர் என்று தெரிகிறது.

மொழிவழி அரசு!

பட்டேல் பதட்டம்

பம்பாய், ஜூன் 16—

பம்பாயைத் தலைநகராகக் கொண்டு ஐக்கிய மகாராஷ்டிர மாநிலம் அமைக்கக் கோரி, அதற்காக மாநாடு ஒன்றைக் கூட்டுவதாக, இரண்டு மக்கள் சபை உறுப்பினர்கள், 12 சட்ட சபை உறுப்பினர்கள், 18 நகர சபை அங்கத்தினர்கள் ஆகியோர் உள்ளிட்ட 72 காங்கிரசார் அறிவித்திருந்தனர்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முடிவுக்கு எதிராக, இப்படி, மாநாடு கூட்டத் துணிந்த அந்த 72 காங்கிரசார் மீதும் பம்பாய் காங்கிரஸ் தலைவர் பட்டேல், நடவடிக்கை மேற்கொண்டுள்ளாராம்.

ராஜ்ய புனரமைப்புக் குழுவினரிடம் காங்கிரசார், தனியாகவோ, கூட்டாகவோ கருத்தறிவிக்க சுதந்திரம் தரப்பட்டிருந்தாலும், மொழிவழி மாநில அமைப்புக்காக, மக்கள் கிளர்ச்சிகளைத் தூண்டக் கூடாது என காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது எனவும் பட்டேல் கூறினார்.

ஜினிவா மாநாடு

வருகிற புதன் அன்று நடைபெறும் மாநாட்டின் போதும் பேச்சு வார்த்தைகளைத் தொடர முடிவெடுக்கப்பட்டால், இந்தோ சீன சமாதான மாநாட்டை கொஞ்ச நாட்களுக்கு நிறுத்தி வைப்பது நல்லது என்று பிரிட்டன் யோசனை கூறியிருக்கிறது. போர் நிறுத்தக் கமிஷனுக்கு, சிறப்பு வாக்கொன்று அளிக்கும் அதிகாரத்துடன் இந்தியா தலைமை வகிக்க வேண்டுமென்று மாலடோவ் கூறினார்.

இந்தி மொழிக்கும் தனி மாநிலம்

மத்ய பாரதத்துடன் மகாகோசலத்தை இணைக்கக் கோரிக்கை

இந்தூர், ஜூன் 16—

"மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்படுமானால் இந்தி மொழியைப் பேசும் மக்களை பெருவாரியாகக் கொண்ட பிரதேசமும், ஒரு தனி மாநிலமாக அமைய வேண்டும். ஐக்கிய மாகாணம், பீகார், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இரண்டரை கோடி இந்தி பேசுபவர்கள் இருக்கிறபடியால், இவர்களுக்கென தனி மாநிலம் ஒன்று அமைக்கலாம்—மத்திய பாரத மாநிலத்தோடு மகாகோசலப் பிரதேசத்தையும் சேர்ப்பதின் மூலம், இதன் வருமானம் கூட ரூ. 25 கோடியாக இருக்கும்,'

—என, மகாகோசலப் பிரதேச காங்கிரஸ் தலைவர் சேத் கோவிந்ததாஸ் இன்று கூறினார். அவர் மேலும் சொன்னார்:—

"இந்தக் கருத்தை, ராஜ்ய புனரமைப்புக் குழுவினிடத்தில், மத்ய பாரத காங்கிரஸ் கொடுத்த அறிக்கையிலும் குறிப்பிட்டிருப்பதால் அவர்களும் இதைத்தான் ஆதரிக்கிறார்கள்."

“மத நம்பிக்கைகள் பூர்ஷ்வா தத்துவத்தின் எச்சம்”

— (:) —

“விஞ்ஞான ரீதியில் நாத்திகம் பேசி அதைத் தொலைக்கவும்”

‘கம்யூனிஸ்டு கட்சி முக்கிய பணியாகக் கொண்டு பணியாற்ற வேண்டும்’

ரஷிய கம்யூனிஸ்டு இளைஞர் சங்கத்தின் கோரிக்கை

✶

“மத நம்பிக்கைகளையும், மாச்சரியங்களையும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிற—பழங்காலக் கோட்பாடுகளின் மிச்சம் மீதி, இன்றும் நமது இளைஞர்களைப் பற்றிக் கொண்டு இருக்கின்றன என்ற உண்மையைக் காணாமல், நாம், நம் கண்களை மூடிக் கொள்ளக் கூடாது.”

“திடமான இலட்சியப் போராட்டமின்றி, பூர்ஷ்வா லட்சியத்தின் அந்தத் துண்டுத் துணுக்குகள் தொலைந்து போகா.”

“விஞ்ஞான ரீதியில், நாத்திக பிரசாரம் செய்தும், உயிர் நூல் பற்றிய விளக்கம் தந்தும், கலாசார போதனையளித்தும், பலனுள்ள விளையாட்டுகளில் ஈடுபடச் செய்தும், அம்மத மாச்சரியங்களை எதிர்த்துப் போராடுவதை, மிக முக்கியப் பணியாக கம்யூனிஸ்டு இளைஞர் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும்.”

கம்யூனிஸ்ட் கட்சி இளைஞர்களை அடிமை கொண்டுள்ள பழமை ஆதிக்கத்தை விரட்ட, இலட்சிய பூர்வமாக மன உறுதியுடன் தீவிரமாகப் போராட வேண்டுமென, ரஷ்ய கம்யூனிஸ்டு இளைஞர் சங்கத்தின் சார்பில் நடைபெற்றுவரும் ‘கோம்கோமோல்ஸ் கயா பிராவ்டா’ எனும் சஞ்சிகை கோரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கத்தி போயிற்று!

இப்போது வாலும் போகிறது!

கராச்சி, ஜூன் 14—

கிழக்கு பாகிஸ்தான் முஸ்லீம் லீக் தலைவரான நூருல் அமீன் தனது பதவியை உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டுமெனக் கோரி, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையின் கிழக்கு வங்க அங்கத்தினர்கள் கோரியுள்ளனர்

அவர், பதவியை ராஜினாமாச் செய்ய விரும்பவில்லையாம்.

அவர், தலைவர் பதவியை உடனடியாக ராஜினாமாச் செய்யவில்லை என்றால், வரும் ஜூலையில் நடைபெறும் அகில பாகிஸ்தான் முஸ்லீம் லீக் மாநாட்டில், அவர் மீது நம்பிக்கை இல்லையென்றோ, அல்லது தலைவர் பதவியை உடனடியாக ராஜினாமாச் செய்யக் கோரி தீர்மானம் ஒன்று நிறைவேற்றும் எனத் தெரிகிறது

200 நகரசுத்தி தொழிலாளர்கள் கைது

பாட்டியாலாவில் வேலை நிறுத்தம்

பாட்டியாலா, ஜூன் 13—

200-க்கும் அதிகமான நகர சுத்தித் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் கடந்த நான்கு நாட்களாக, புதியதாக தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பதை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

புதிய தொழிலாளர்கள் போலீஸ் பாதுகாப்புடன் நகர சுத்திப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அத்தியாவசிய சேவைச் சட்டத்தின்படியே அத்தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்வதையும் பொருட்படுத்தாது தொழிலாளர்கள், ஆண் - பெண் வேறுபாடின்றி உரிமைக் குரல் எழுப்புகின்றனராம்.

600 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்

பஞ்சாப் சர்க்காரின் ஆட்குறைப்பு நடவடிக்கை

பஞ்சாப் சர்க்கார், சிவில் சப்ளை இலாகாவிலிருந்து 600 பேரை வேலையிலிருந்து நீக்கியிருக்கின்றனர்.

இத்துடன் சிவில் சப்ளை இலாகாவிலிருந்து சர்க்கார் ஆட்குறைப்பு நடவடிக்கைகளால் வேலையிழந்தோரின் தொகை 2,700 ஆகும்.

வேலையிழந்தோர் வேறு இலாகாக்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று சர்க்கார் அறிவித்திருக்கிறது.

திருமணங்கள்

2—6—54 அன்று அந்தக்குடி டேவின்புரம் ரோட்டில் மணமகன் இல்லத்தில் ஏ. சுந்தரபாண்டியனுக்கும்—தோழியர் சின்னத்தங்கம்மாளுக்கும் நடந்த திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது -வரப்பெற்றோம்— நன்றியுடையது— பொறுப்பாளர்.

* * *

13—6—54 ஞாயிறு காலை திருவொற்றியூரில் சன்னதித் தெருவில் தோழர் ம. வரதராசன்—தோழியர் பாலாம்பாள் அம்மையாருக்கும் திருமண நிகழ்ச்சி மணம் நடைபெற்றது. தோழர் சி. சிவப்பிரகாசம் தலைமை தாங்கினார். தோழர்கள் தி. க. மதிவாணன், பொன்னுரங்கம், இளஞ்சேரன், என். எஸ். சடையப்பன் முதலியோர் பேசினர். தோழர் ஜெயராமன் சீர்திருத்தப் பாடல்கள் பாடினார். இத்திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ நிதி வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்-நன்றியுடையது - பொறுப்பாளர்.

• • •

9—6—54 காலை 11 மணிக்கு சீ மங்கலம் ஆவணாபுரியில் தோழர் ம. நா. தருமலிங்கத்துக்கும்—தோழியர் இராசேசுவரிக்கும் நடந்த பதிவுத் திருமணத்தில் பல தோழர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது-பொறுப்பாளர்.

• • •

10—6—54ல், திருக்கோட்டியூரில், தோழர் பெருமாள்—தோழியர் வெள்ளையம்மாள் திருமணம் நடைபெற்றது. பலர் பாராட்டுரை வழங்கினர்.

கிழக்கு-மேற்கு பாகிஸ்தான் பிளவு உண்மையே!

பிரிட்டிஷ் நிபுணர் கருத்து

லண்டன், ஜூன் 16—

‘கிழக்கு பாகிஸ்தானுக்கும்—மேற்கு பாகிஸ்தானுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் நிலவுவது உண்மையே,’’

என்று காலின் கிளார்க் என்ற ஆங்கில நாட்டு நிபுணர் ஒருவர் கூறுகிறார்.

1952-ம் ஆண்டில் கொழும்புத் திட்டத்தின்படி காலின் கிளார்க் பாகிஸ்தான் முழுமையும் பொருளாதார புள்ளி விபரங்களைச் சேகரித்தவர்.

பாகிஸ்தான் மக்களின் நன்மைக்காக, இந்தப் பிளவு சரிப்படுத்த வேண்டுமென்று அவர் மேலும் கூறுகிறார்.

தொழில் துறையிலும், வியாபாரத்திலும், கிழக்கு பாகிஸ்தானை விட மேற்கு பாகிஸ்தான் அதிக அளவில் முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும், கிழக்கு—மேற்கு பாகிஸ்தான் பகுதிகளிடையே காணப்படும் கருத்து வேற்றுமைகள் நாளுக்கு நாள் அதிகமாவதால் பாக். சர்க்கார் உடனே கிழக்கு பாகிஸ்தானின் தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார்

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மட்டுமின்றி மொழியிலும் இரண்டு பகுதிகளுக்கிடையேயும் வேற்றுமை உள்ளது; வங்காளிகள் தங்கள் மொழியின் மீதும், கலாசாரத்தின்மீதும் அதிகக் கவனமுடையவர்களாக இருக்கின்றனர் என்று காலின் கிளார்க் கூறுகிறார்.

கிழக்கு வங்க அகதிகளுக்கு புது வாழ்வு?

இந்திய சர்க்கார் உதவி விவரம்

ஸ்ரீநகரில் நடைபெற்ற அகதிகள் புனரமைப்பு மாநாடு மிகவும் வெற்றிகரமாகவும், லாபகரமாகவும் இருந்தது என்று மேற்கு வங்க அகதிப் புனர் அமைப்பு இலாகா அமைச்சர் திருமதி ரேணுகா ராய் தெரிவித்தார்.

சர்க்கார் தரும் உதவிகளைக் கொண்டு அகதிகள் தங்களைத் தாங்களே புனர் அமைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சர்க்காரே நேரடியாக எல்லா அகதிகளையும் புனர் அமைக்க இயலாதென்றும் அவர் மேலும் கூறினார்.

கிழக்கு வங்கத்திலிருந்து வந்த 26 லட்சம் அகதிகளில் 16 லட்சம் பேருக்கு வசதிகள் செய்து தரப்பட்டன என்று தெரிகிறது.

ஸ்ரீநகரில் நடைபெற்ற மாநாட்டினை பற்றிக் கூறும் போது அவர் சொல்லுவதாவது:-

அகதிகளுக்கு மேற்கு வங்கத்தில் பொருளாதார நிறைவு பெற்ற நிலங்களை வாங்கி சாகுபடி செய்ய ஏகர் ஒன்றுக்கு ரூ 100 வீதம் கடன் தரப்படும் நிலங்களைச் சீர்திருத்தவும் போதிய வசதிகளைச் செய்யவும் ரூ 300 ஏக்கர் ஒன்றுக்கு மானியம் தரப்படும்

சர்க்கார் நேரடியாக எல்லா அகதிகளுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க முடியாதாகையால் வீடுகள் வாங்குவோருக்கு கடன் தரலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது இம்முறையில் கல்கத்தாவில் 10,000 குடும்பங்கள் பயன் அடையும் என்று தெரிகிறது.

மேற்கு இந்தியாவில் அகதிகள் பிரச்சினை குறைந்து வருவதாயும் இனிமேல் கிழக்குப் பகுதியில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று தான் ஸ்ரீநகர் மாநாட்டில் கூறியதாகவும், செப்டம்பர் மாத மத்தியில் கிழக்கு இந்தியப் பகுதிகளில் உள்ள அகதிப் புனர் அமைப்பு இலாகா அமைச்சர்கள் மாநாடொன்று நடத்துவார்கள் என்றும் திருமதி ரேணுகா ராய் கூறினார்.



உலக அரங்கில்

லண்டன் :

ஜினீவாவில் நடைபெறும் இந்தோ-சீன மாநாடு பற்றி தனது கருத்தினைத் தெரிவிப்பதால் பயன் ஏதும் கிடையாது என்று வி. கே. கிருஷ்ணமேனன் அறிவித்தார்.

*　*　*

இங்கிலாந்தின் பிரபல பத்திரிகையான 'டெய்லி டெலிகிராப்'பின் ஆசிரியர் லார்டு கம்ரோஸ் வைத்தியசாலையில் மரணமடைந்தார் என்று தெரிகிறது.

★

ஜினீவா :

பிரிட்டனுக்கு சீனா ஒரு ராஜ்ய தூதுக்குழு ஒன்றை அனுப்பும் என்று தெரிகிறது. ஏற்கனவே பிரிட்டனின் தூதர் பீகிங்கில் இருக்கிறார்.

★

வாஷிங்டன் :

அமெரிக்காவின் புதிய அரசியல் கட்சியான ஏ. டி. ஏ. கட்சியினர் அமெரிக்கா ஆசிய நாடுகளுக்கு உதவி செய்து அந்த நாடுகளின் சுதந்திரத்தைக் காக்க வேண்டுமென்று அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

★

கேப்டவுன் :

கருப்பர்களுக்கென்று தனி வாக்காளர் ஜாபிதா ஒன்றை தயாரிக்க அனுமதிக்கும் மசோதா தோல்வி அடைந்தது பற்றிப் பேசுகையில் தென் ஆப்பிரிக்கப் பிரதமர் டாக்டர் மலான், இப்போராட்டம் நீடிக்குமென்றும், வருகிற ஆண்டில் நடைபெறும் தேர்தல்களில் இப்பிரச்சினை பரீட்சித்துப் பார்க்கப்படுமென்று கூறினார்.

★

பெல்கிரேட் :

யூகோஸ்லோவாகியாவுக்குச் செல்லும் திருமதி விஜயலட்சுமி பண்டிட் ஐ. நா. சபையில் சீனாவைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்றுதான் கருதுவதாகக் கூறினார்.

★

டசல்டார்ப் (மே. ஜெர்மன்)

மூன்று வார காலம் மேற்கு ஜெர்மனியில் சுற்றுப் பயணம் செய்யும் பொருட்டு ஏழு உறுப்பினர்களை கொண்ட இந்தியப் பத்திரிகையாளர் தூதுக்குழு ஒன்று மேற்கு ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்தது.

★

ஜார்ஜ்டவுன் :

பிரிட்டிஷ் கயானாவின் கவர்னர் மீண்டும் கயானா மக்கள் தலைவர்களில் பலருக்கு நடமாட்டத் தடை விதித்திருக்கிறார். அவர்களில் சட்டசபை உறுப்பினர்களும் உள்ளனர்.

★

பாரிஸ் :

ஜெர்மனியர்களுடன் உறவாடினார் என்று 20 ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டவரும் தலைமறைவாய் இருந்தவருமான முன்னாள் பிரெஞ்சுத் தளபதி அகஸ்டின் நாகுவ பிரெஞ்சு அதிகாரிகளிடம் சரண் அடைந்தார்.

*　*　*

பிரான்சின் புது பிரதமராக மண்டேஸ் பிரான்ஸ், இந்தோசீனப் பிரச்சினைக்காக ஜினீவாவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் தனக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்தார். ஜினீவா பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிகிறது.

★

ஏதென்ஸ் :

பாகிஸ்தான் பிரதம மந்திரி முகமது அலியும் அவரது குழுவினரும் ஏதென்ஸ் வந்து சேர்ந்தனர். நாளை அவர்கள் டமாஸ்கஸுக்குச் செல்வார்...

பான் :

குவாடிமாலாவுக்கு ஸ்விட்ஜர்லாந்திலிருந்து அனுப்பிய ஆயுதங்கள் அடங்கிய வெடி மருந்துகளை அமெரிக்க அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் மேற்கு ஜெர்மன் அதிகாரிகள் தடுத்து நிறுத்திவிட்டனர் என்று தெரிகிறது.

★

லிமெரிக் :

லிமெரிக் நகரசபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆர்மகாவில் வெடி மருந்துச் சாலையில் நடைபெற்ற கொள்ளை பற்றிய விசாரணையில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உதவி செய்ய வேண்டாம் என்று அயர்லாந்து ஐக்கிய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள்.

★

பாங்காக் :

தெற்கு லாவோஸ் பகுதியில் உள்ள தாகெக் நகரில் நெருக்கடி நிலைமைப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டுகளின் தாக்குதலை எதிர்பார்த்தே இந்த நிலைமையாம்.

★

நியூயார்க் :

1960-க்குள் சோமாலிலாந்துக்கு முழுச் சுதந்திரம் கிடைக்கும்படி எல்லா ஏற்பாடு செய்ய இத்தாலி மிகவும் தாமதம் செய்வதாக இந்தியாவின் பிரதிநிதி ராஜேஷ்வர் தயாள் கூறினார். சோமாலிலாந்து ஐ. நா. டிரஸ்டிஷிப் கவுன்சிலில் ஒன்றாகும்.

★

இரங்கூன் :

மாண்டலேக்கு அருகில் உள்ள பாலம் ஒன்றை தகர்க்க முயற்சிக்கையில், பர்மிய கம்யூனிஸ்டுகளின் பயங்கரவாதிகளில் ஒருவரான கோ-பூ என்பவர், பாம்பு கடித்து, பாலத்தின் அருகேயே மாண்டு கிடந்தார் என்று தெரிகிறது.

★

மான்செஸ்டர் :

பிரிட்டனின் மில் தொழிலாளர்களில் 300,000-க்கு மேற்பட்டவர்களின் சார்பில் தொழிலாளர் தலைவர்கள் பத்து சதவீதம் கூலி உயர்வு வேண்டுமென்று கோரிக்கை ஒன்றை தந்திருக்கின்றனர். வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து விட்டதாலேயே இந்த அதிகச் சம்பளக் கோரிக்கை எழும்பியதாம்.

★

சிட்னி :

வட அட்லாண்டிக் நாடுகள் ஒப்பந்தத்தால் பயன் ஏதும் கிடையாதென்றும், அது பசிபிக்கில் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு சிறந்த ஏற்பாடு அல்ல என்று தென் கொரிய அதிபர் சிங்மன்ரீ தெரிவித்தார்.

★

சசெக்ஸ் :

ஆங்கிலோ மின்சாரக் கம்பெனியின் தலைவர் ஜார்ஜ் நெல்சன், ஷெபீல்டு, கம்பர்லாந்து ஆகிய இடங்களில் கட்டப்படும் அணுசக்தி நிலையங்களிலிருந்து 1960-க்குள் மின்சார சக்தி கிடைக்கும் என்று கூறினார்.

★

மாஸ்கோ :

ருஷ்யாவில் உள்ள இரண்டு அமெரிக்க ஒற்றர்கள் சரண் அடைந்துவிட்டார்கள் என்று சோவியத் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா' அறிவிக்கிறது.

★

கெய்ரோ :

பிரதம மந்திரி சாபிரியன் அரசியின் இராஜினாமாவிற்குப் பின் சிரியாவில் வேறு சர்க்கார் ஏற்படும் வரை கட்டு சர்க்கார்...

செய்திக்கதிர்

சத்தியாக்கிரகம்

நேப்பாள காங்கிரஸ் காட்மாண்டு பள்ளத்தாக்கில் சீக்கிரமே சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★

அபிவிருத்தி சங்கம்

இந்தியக் கைவேலைப் பொருள்களை அயல் நாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதியாகும் வகையில் முயற்சி செய்ய, ஏற்றுமதி அபிவிருத்தி சங்கம் அமைப்பதென்று அகில இந்திய கைத்தொழில் போர்டு தீர்மானித்தது.

★

வரவேற்பு

இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக்கிற்கும் அவரது மனைவியார் திருமதி துர்காபாய் தேஷ்முக்கிற்கும் சென்னைக் கார்ப்பரேஷன் 17-ம் தேதியன்று வரவேற்பளிக்கும் என்று தெரிகிறது.

★

எதிர்ப்பு

நில உடைமைக்கு வரம்பு கட்டுவதை திருச்சி மாவட்ட மிராசுதார்கள் சங்க நிர்வாகக் கமிட்டியினர் கண்டித்திருக்கின்றனர். இதன் மூலம் உற்பத்தி பாதிக்கப்படும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

★

மறுப்பு

ஏனாம் விடுவித்து அதிகாரத்தை மக்கள் கைப்பற்றியதில் இந்தியா சம்மந்தப்பட்டுள்ளதென்று பாரிசில் உள்ள பிரெஞ்சு அதிகாரிகள் கூறுவதை டில்லியில் உள்ள அதிகார வட்டாரங்கள் மறுக்கின்றன.

★

தேவை

கான்பூர் பல்கலைக் கழகத்தினர், தங்களுக்கு வைத்தியக் கல்வி போதனைக்குப் பேராசிரியர்கள் தேவை என்று இந்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

★

அதிகாரி வருகை

கோல்டு கோஸ்ட் தொழில் இலாகா சீனியர் உதவிக் காரியதரிசி ஜே. எஸ். அன்னூன், கூட்டுறவு ஸ்தாபனங்கள் செயல்படுவது பற்றி நேரில் கண்டறிய சென்னை வந்து சேர்ந்திருக்கிறார்.

★

சர்க்கரை ஆலை

ஆந்திர ராஜ்யத்தில் இரண்டு அல்லது மூன்று சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க இந்திய சர்க்காருக்கு ஆந்திர சர்க்கார் மனுச்செய்து கொண்டிருக்கிறது என்று தெரிகிறது.

★

ஏற்றுமதி

மைசூரின் உணவு நிலைமை திருப்திகரமாக இருப்பதால் அரிசி, சர்க்கரை இவைகளை ஏற்றுமதி செய்ய மைசூர் சர்க்கார் முடிவு செய்துள்ளனர். 20,000 டன் அரிசியும், 2,400 டன் சர்க்கரையும் ஏற்றுமதி செய்யப்படுமாம்.

...ராவின் அரசியல்வாதிகள் தயங்கினால், தங்கள் மேற்பார்வையில் புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படும் என்று சிரியா ராணுவம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

★

ஹேக் :

உலக நீதி மன்றம் 800,000 ஸ்டர்லிங் மதிப்புள்ள அல்பேனியத் தங்கம் பிரிட்டனுடையதா, அல்லது இத்தாலியினுடையதா என்று தீர்மானிப்பது தனது அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட...

மராட்டிய மொழி மாநிலம்: காங்கிரஸ்காரர் ஆதரவு

பம்பாய் பிரதேச காங்கிரஸ் முடிவிற்கு எதிர்ப்பு

கட்சிக்குள் பேதம் முற்றுகிறது!

பம்பாய் பிரதேச காங்கிரஸ் குழு, மொழிவழியில் இந்தியாவை சீர்திருத்தி உடனடியாக அமைக்கக் கூடாது எனவும், இப்பிரச்சினையை குறைந்தது 25 ஆண்டு காலத்திற்காவது தள்ளி வைக்க வேண்டுமெனவும், கோரிக்கை ஒன்றை மாநில சீர்திருத்தக் குழுவிடம் கொடுத்திருக்கிறது.

அதை ஒப்புக் கொள்ளாத காங்கிரஸ் கட்சியினர், பம்பாயைத் தலைநகராகக் கொண்டு, பம்பாய் ஐதராபாத், மத்திய பிரதேசம் முதலிய மாநிலங்களில் தொடர்ந்தாற்போல் உள்ள மராட்டிய மொழி வழங்கும் நிலப் பரப்புகளை ஒன்றாக இணைத்து, புதிய மராட்டி மொழி மாநிலத்தை உருவாக்க வேண்டுமெனும் கோரிக்கையை, மேற்படி குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பம்பாய் நகரத்தைச் சேர்ந்த 500 காங்கிரஸ் கட்சியினர், தாதரில் உள்ள ஜார்ஜ் அரசர் உயர்நிலைப் பள்ளியில் கூடி, பம்பாய் பிரதேச காங்கிரஸ் குழுவின் கோரிக்கையை எதிர்த்தும், மராட்டி மொழிவழியில் மாநிலத்தை உருவாக்க வேண்டிய இன்றியமையாமையைக் குறித்தும் தீர்மானித்துள்ளனர்.

பம்பாய் நகரத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 8 சட்டசபை உறுப்பினர்களும், 2 மேல் சபை உறுப்பினர்களும், 14 நகரசபை உறுப்பினர்களும், 3 காங்கிரஸ் மாநிலக் குழு உறுப்பினர்களும், பல மாவட்ட வட்டார காங்கிரஸ் குழுவின் தலைவர்களும், துணைத் தலைவர்களும் செயலாளர்களும், மேற்படி மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

இது விஷயத்தில், காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறியதாக, சில சட்டசபை உறுப்பினர்கள்மீது, பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முனைவதிருப்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

கனத்தின் பதவி மோகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

13—6—54 மாலை 6-30 மணிக்கு திண்டிவனத்தில், பெரியார் திடலில் தோழர் வி. கோபால கவுண்டர், எம். எல். ஏ. தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் பேசியதாவது :—

"எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் காங்கிரசில சேர்ந்ததை நாமும், இதர வன்னிய பிரமுகர்களும் பலமாக ஆட்சேபிப்பதை அவர் பொருட்படுத்தவில்லை; பொதுஜன அபிப்பிராயத்தை கலப்பதற்குப் பிரியப்படாமல் மந்திரி பதவியே பிரதானமென்று போகும் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்."

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உழைப்பாளி கட்சியை மற்ற எதிர்க் கட்சிகள் தேர்தலில் ஆதரித்ததற்குக் காரணம், அக்கட்சியினர் வெளியிட்ட முற்போக்குத் திட்டங்கள்தான்.

"மாணிக்கவேலர் செய்தது தவறு என்று கூறிய எஸ். எஸ். ஆர். அதே தவறை அவர் செய்தது சரியா? இவ்விதம் இவர் கட்சி மாறுபவர் என்று தெரிந்திருந்தால் அவருக்கு மக்கள் ஓட்டளித்திருக்கமாட்டார்கள். இரண்டாண்டு மந்திரியாயிருந்த மாணிக்கவேலர் மக்களுக்கு எதைச் சாதித்தார்? ஏழை வன்னிய மக்களுக்கு புறம்போக்கு நிலத்தில் பயிரிடும் பாத்தியதை கொடுத்தாரா? அதற்குப் பதிலாக அவர்களுக்குத் தாங்க முடியாத அபராதத்தைத்தான் போட்டார். இப்போது எஸ். எஸ். ஆர். மட்டும் எதை சாதிக்க முடியும்?' என்று கேட்டார்.

"பிற்பட்ட இனத் தலைவர்களைக் கொண்டே பிற்பட்ட இன மக்களுக்கு விரோதமாக ஓட்டளிக்கும் முறையைக் கொண்டுவந்துள்ள அவர் காங்கிரஸ்காரர்களின் திட்டத்தை எதிர்க்கவில்லை திருக்கோவிலூரில் 'டம்'-முறையை சோதனை... விட்டுப் பார்க்கையில், செல்லக்கூடிய ஓட்டுகளைவிட செல்லாத ஓட்டுகள் அதிகமிருந்ததாகத் தெரிந்திருந்தும் ஏன் அத்திட்டத்தை வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தலில் கொண்டுவர வேண்டும்? நேற்று வரை ஒரு கட்சியின் தலைவராயிருந்த எஸ். எஸ். ஆர்., இன்று காமராசரின் சிஷ்யராக மாறியிருப்பது வெட்கக்கேடானதாகும்."

அடுத்து, தோழர் திருக்குறள் வீ. முனுசாமி, எம். பி. அவர்கள் பேசியதாவது :—

'எதிர்க் கட்சி பலமாக இருந்தால்தான் மக்களின் பிரச்சினைகளுக்கு நல்லதோர் முடிவு காண முடியும். அதற்காகவே மேல்நாடுகளில்எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு ரூ. 2000, ரூ 3000 சம்பளம் தரப்படுகிறது," என்றார்.

"நண்பர் அண்ணாதுரை அவர்கள். 'அடுத்த தேர்தலில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்களைப் போட்டியிடச் செய்து எஸ். எஸ். ஆர். அவர்களைத் தோற்கடிப்பேன்,' என்றார். நிச்சயமாக அண்ணாவாலும், பெரியாராலும்— ஏன் எவராலேயும் அவரை எதிர்த்துப் போட்டிபோட முடியாது; ஏனென்றால், அடுத்த தேர்தலில் அவர் நின்றால்தானே ?" என்று கூறி முடித்தார்.

சேலம் வட்ட தி. மு. க. கிளைக் கழக உறுப்பினர்களுக்கு

17-6-54 காலை $10\frac{1}{2}$ மணிக்கு சேலம் வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், சேலம் பார்க் தெருவிலுள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு மேற்படி (24, ... தெரு, ... இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.